# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.92/2024

## அ.சா. 10 (LW 10 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. செபஸ்தியார்** | **தொழில்** | |
| **த/ பெயர்** | ஆரோக்கியம் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **16.03.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி பிடி வாரண்ட் மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கோட்டமந்தயத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்கிறேன். வழக்கில் இறந்த ஆரோக்கியசாமியை தெரியும். அவர் எவ்வாறு இறந்தார் என்ற விவரம் தெரியாது. ஆரோக்கியசாமியின் தோட்டம் ஒத்தையூரில் உள்ளது, அது தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.3.**ஆகும். அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சாஆ.4.** ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநீயம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது.</u> அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

18.07.2022அன்று தோட்டத்திறகு போன போது ஆரோக்கியசாமி இறந்த இடத்தை போலிசார் பார்வையிட்டு படம் வரைந்ததில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். என்னுடன் மரியராஜேந்தர் இருந்தார் என்றால் நான் அவரை பார்க்கவில்லை. அதன் பின்பு ஆரோக்கியசாமியின் வீட்டில் இருந்த டைல்சில் இருந்த இரத்தக்கரையை நூல் மூலம் சேகரிக்கப்பட்டதை நான் பார்க்கவில்லை. அன்று அத்தாட்சியில் கைப்பற்றிய சான்று பொருளான கட்டையை நான் பார்க்கவில்லை. அப்போது போலிசார் கைப்பற்றிய இரத்தக்கறை படிந்த 54 செ.மீ மரக்கட்டையை போலிசார் கைப்பற்றிய அத்தாட்சியில் நானும் மரிய ராஜேந்தரும் கையெழுத்து செய்து விட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை .</u>**

நான் கையொப்பம் செய்த அத்தாட்சி மற்றும் பார்வைமகஜரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் கேட்டுக் கொண்டதற்காக கையொப்பம் மட்டும் போட்டேன் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.16 21:03:55 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.